# லங்காவிக்கு எழில் சேர்க்கும் உலகின் நீளமான வளைவுப் பாலம் விரைவில் திறப்பு விழா காண்கிறது

லங்காவி, ஜன. 20-

லங்காவியின் வட மேற்குப் பகுதியில் அத்தீவுக்கு எழில் சேர்க்க வும் பொது மக்களுக்கான இன்னொரு புதிய வசதியாகவும் அமைக்கப்பட்டுள்ள மச்சின்சாங் தீவுக்கான பாதசாரிகள் பாலம் முடிவடைந்து திறப்பு விழாவுக்காக காத்துக் கொண்டிருக்கிறது.

லங்காவி மேம்பாட்டு வாரியத் தினால் மேற்கொள்ளப் பட்ட இந்த வளைவு பாலம், மலேசியாவில் ஒரு புதிய பரிணாமமாகும். கடல் மட்டத்திலிருந்து 700 மீட்டர் உயரத்திலும் தரை மட்டத்திலிருந்து 100 மீட்டர் உயரத் திலும் இந்தப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே லங்காவியில் கேபிள் கார் திட்டத்தை வடி வமைத்த டாக்டர் பீட்டர் ஏ வாய்ஸ் கூறுகை யில், லங்காவி வருகின்ற சுற்றுப் பயணிகளுக்கும் வருகையாளர் களுக்கும் இது ஒரு மகிழ்ச்சி தரும் புதிய அம்சம் என்று வர்ணித்தார்.

லங்காவியிலிருந்து மேற்கண்ட தீவை இணைக்கும் இந்த 125 மீட்டர் நீள முடைய பாலம் திறக்கப்படும் போது, உலகின் மிகப்பெரிய வளைவுகளைக் கொண்ட பாத சாரி பாலமாக இது விளங்கும் என்று அவர் தெரிவித்தார்.

பாலத்தில் நின்று மக்கள் லங்காவி தீவின் எழிலையும் சுற்றி யுள்ள மலை களையும் கண்டு ரசிக்கலாம்.



